**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4534/ஆ4/ 2024 நாள்.03.01.2025**

**பொருள் :** தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு(TRUSTS), டிசம்பர் 2024 – 01.02.2025(சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள விவரம் பள்ளிகளுக்கு தெரிவித்தல் – தொடர்பாக

**பார்வை :** 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.016971/ டி(4)/2024 நாள் . 12.12.2024
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 12.12.2024
3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.016971/ டி(4)/2024 நாள் . **03.01.2025**

----

பார்வை –1 ல் காணும் அரசு தேர்வுகள் இயக்குநரின் கடிதத்திற்கிணங்க தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) 14.12.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாட்டில் தற்போது பரவலாகப் பெய்துவரும் கனமழையின் காரணமாக, தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு(TRUST) தள்ளி வைக்கப்படுகிறது எனவும் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பார்வை –3 ல் காணும் அரசு தேர்வுகள் இயக்குநரின், செயல்முறைகளின் மேற்படித் தேர்வு 01.02.2025 (சனிக்கிழமை) அன்று நடத்தப்படவுள்ளது என்ற விவரத்தினை இத்தேர்விற்கு விண்ணப்பித்த மாணாக்கர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து அரசு/ ஊரகப் பகுதி பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், புதிய தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை 25.01.2025 முதல் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து அவர்தம் மாணாக்கர்களுக்கு வழங்க வேண்டுமெனவும், தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் புதிய பெயர்ப் பட்டியலை 25.01.2025 முதல் பதிவிறக்கம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

- தேர்வு மைய பள்ளித்தலைமை ஆசிரியர்கள்,வே.மா.
- சார்ந்த உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,வே.மா.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.